| அனுப்புநர், | பெறுநர், |
| --- | --- |
| முனைவர் பெ. குப்புசாமி, | முதன்மைக் கல்வி அலுவலர்கள், |
| இயக்குநர், | அனைத்து மாவட்டங்கள் |
| பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி | |
| இயக்ககம், | |
| சென்னை-600 006. | |

நக.எண் : 353 /ஆ1/2022 நாள் : -03-2023

ஐயா / அம்மையீர்,

பொருள் பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம், சென்னை-6 - " புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022-23 செயல்படுத்துதல் - அடிப்படை எழுத்தறிவுத் தேர்வு 19-03-2023 - அன்று நடத்திட வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் மற்றும் ஆய்வுக் கூட்டம் நடத்துதல் -சார்பு.

பார்வை 1. அரசாணை ( நிலை) எண்:141. பள்ளிக் கல்வித் துறை நாள்: 23-08-2022.

2. இவ்வியக்கக செயல்முறைகள் எண் : 353 /ஆ2/2022 நாள்: 13.09.2022, 30-11-2022 மற்றும் 05-12-2022, 16-2-2023.

3. ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்ட கடிதம் எண்: F.No. 6-1/2023-AE-2 நாள்:14.02.2023

தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களிலும் 15 வயதுக்கு மேற்பட்ட முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாத கல்லாதோருக்கு அடிப்படை எழுத்தறிவினை வழங்கிடும் நோக்கில் புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2022-23 செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயின்றுவரும் கற்போருக்கு அடிப்படை எழுத்தறிவுத் தேர்வு 19-03-2023 அன்று நடைபெறவுள்ளது. இந்த அடிப்படை எழுத்தறிவுத் தேர்வை சிறப்பாக நடத்துதல் சார்ந்து அனைத்து மாவட்டங்களிலும் தேர்வுக்கான முன்னேற்பாடுகளை முதன்மைக்கல்வி அலுவலர்கள் தலைமையில் 15-03-2023

முதல் 17-03-2023 க்குள் ஏதேனும் ஒரு நாள் நடத்தப்படவேண்டும் இக்கூட்டத்தில் தேர்வு தொடர்பான வழிகாட்டு நெறிமுறையும் வழங்கப்படவேண்டும்.

எனவே நடைபெறவுள்ள தேர்வு முன்னேற்பாட்டுக்கூட்டத்திற்கு மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர், மாவட்டக் கல்வி அலுவலர்கள், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி உதவித் திட்ட அலுவலர் மற்றும் உதவி மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர், வட்டாரக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன விரிவுரையாளர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் ஆகியோர் உரிய விவரங்களுடன் கலந்துகொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : வழிகாட்டு நெறிமுறைகள்

இயக்குநர்,

பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம்,

சென்னை - 600 006

**2023 மார்ச் 19-ஆம் நாள் நடை பெற உள்ள புதிய பாரத எழுத்தறிவுத் திட்ட கற்போர்க்கான அடிப்படை எழுத்தறிவுத் தேர்வு நடத்துவது சார்ந்த வழிகாட்டு நெறிமுறைகள்**

| | | |
|---|---|---|
| 1. | **தேர்வு நடைபெறும் நாள்** | **2023 மார்ச் 19 ஆம் நாள்<br>ஞாயிற்றுக் கிழமை** |
| 2. | **தேர்வு நடைபெறும் நேரம்** | **காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை** |
| 3. | **தேர்வு நடைபெறும் மையம்** | **திட்டம் செயல்படும் பள்ளி** |
| 4. | **தேர்வர்களை பதிவு செய்வதற்கான இறுதி நாள்** | **தேர்வு நடைபெறும் நாள் வரை** |

**5. தேர்வு நடைபெறும் அறை மற்றும் தேர்வுக்கான முன்னேற்பாடுகள்**

- தமிழகத்தில் 15 வயதிற்கு மேற்பட்ட முற்றிலும் எழுத மற்றும் படிக்கத் தெரியாத அனைவருக்கும் அடிப்படை எழுத்தறிவை வழங்கிட வேண்டும் என்பதே வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் முதன்மையான இலக்காகும். இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்ற புதிய பாரத எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் பயின்று வரும் அனைத்து கற்போர்களும் அடிப்படை எழுத்தறிவுத் தேர்வில் கலந்து கொள்ளும் வகையில் 19-03-2023 அன்று அடிப்படை எழுத்தறிவுத் தேர்வு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.
- கற்போர்களின் வசதிக்கேற்ப அடிப்படை எழுத்தறிவுத் தேர்வானது பள்ளியிலோ அல்லது அவர்கள் பணிபுரியும் இடத்திலோ அல்லது அவர்களுடைய இல்லங்களிலோ இத்தேர்வை எழுத அனுமதிக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட இலக்கின் படி அனைத்து கற்போர்களும் தேர்வில் கலந்து கொள்ளும் வகையில் உரிய நடவடிக்கைகளை மையம் சார்ந்த ஆசிரியர் பயிற்றுநர், தலைமையாசிரியர், பள்ளி உதவி ஆசிரியர் மற்றும் மையத்தின் தன்னார்வல ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- 19 . 03 . 2023 அன்று, தேர்வு நடைபெறும் மையங்கள், கற்போர் எண்ணிக்கை ஆகிய விவரங்களை மாவட்டம் மற்றும் ஒன்றியங்கள் அளவில் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- தேர்வு நடைபெறும் நாளன்று தேர்வர்கள் தேர்வு எழுதுவதற்கான இருக்கை வசதிகள், குடிநீர் வசதி, கழிவறை வசதி ஆகியவை அந்தந்த மையத்தினுடைய தலைமையாசிரியர் ஏற்பாடு செய்ய வேண்டும்.
- முதன்மைக் கண்காணிப்பாளராக பள்ளியின் தலைமையாசிரியரும், அறை கண்காணிப்பாளராக தன்னார்வல ஆசிரியர்களும் செயல்பட வேண்டும்.
- தேர்வர்கள் தன் விருப்பத்திற்கேற்பவும், வசதிக்கேற்பவும் தேர்வு நடைபெறும் நாளன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை தேர்வு எழுதலாம்.

- தேர்வு நடைபெறும் நாளில் தேர்வர்களின் வருகையை, வருகைப் பதிவுத் தாளில் தன்னார்வல ஆசிரியர்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.
- தேர்வு முடிந்தவுடன் வருகைப் பதிவுத் தாள், வினா - விடைத் தாள் பயன்படுத்தப்படாத வினா - விடைத் தாள், ஆகியவற்றை வட்டார வள மையத்தில் அந்தந்த மையத்தினுடைய தன்னார்வல ஆசிரியர்கள்/தலைமையாசிரியர்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்.
- வினா – விடைத்தாள் தேவையான எண்ணிக்கையில் பெறப்பட்டுள்ளதா என்பதை தேர்வு நடைபெறும் நாளுக்கு முதல் நாளே சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரால் உறுதி செய்யப்பட வேண்டும்.

**6. வினா – விடைத்தாள் வழங்கும் முறை**

- ஒவ்வொரு மையத்தில் உள்ள தேர்வர்களின் எண்ணிக்கைக்கேற்ப வினா - விடைத்தாள்களைக் கொண்ட கட்டுகள் 17-03-2023 -க்குள் சார்ந்த வட்டார வள மையங்களுக்கு இவ்வியக்கத்தினால் வழங்கப்படும். தேர்வு நடைபெறும் நாளன்று கூடுதலாக தேர்வு எழுத வரும் கற்போருக்கு தேவையான வினா - விடைத்தாளை சார்ந்த மையங்கள் நகல் எடுத்து பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.
- வினா - விடைத்தாள் அடங்கிய உறையின் மேல் எழுதப்பட்டிருக்கும் மையத்தின் பெயர், அம்மையத்தில் பயிலும் கற்போரின் எண்ணிக்கைக்கேற்ப வினா - விடைத்தாள்களின் எண்ணிக்கை, வருகைப் பதிவு படிவம், மதிப்பெண் படிவம் போன்ற விவரங்களை தங்களிடமுள்ள விவரங்களின் அடிப்படையில் சரிபார்த்து சார்ந்த வட்டார வள மைய பொறுப்பாளர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- வட்டாரவளமைய பொறுப்பு மேற்பார்வையாளர் மையத்திற்குத் தேவையான வினா – விடைத்தாள்களை 18 - 03 - 2023 அன்று மாலை தலைமையாசிரியரிடம் ஒப்படைத்து தேர்வு தொடங்கும் வரை பாதுகாப்பாக வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
- தேர்வு தொடங்குவதற்கு 10 நிமிடத்திற்கு முன்னர் வரை வினா - விடைத்தாளை எக்காரணம் கொண்டும் பிரிக்கப்படக் கூடாது. அரசுத் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் இத்தேர்வின் மந்தணத் தன்மை முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

**7. தேர்வு கண்காணிப்பு**

**அ. ஒன்றிய அளவில் தேர்வு மேற்பார்வை:**

- தேர்வு நடைபெறும் அனைத்து மையங்களையும் பார்வையிடும் வகையில் ஒன்றிய அளவில் **வட்டாரக் கல்வி அலுவலர்** , **வட்டார வள மைய மேற்பார்வையாளர்**, **ஆசிரிய பயிற்றுநர்கள்** ஆகிய அலுவலர்களை பார்வையாளர்களாக நியமிக்க வேண்டும்
- ஒவ்வொரு அலுவலரும் குறைந்த பட்சம் 10 தேர்வு மையங்களையாவது பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

**ஆ. மாவட்ட அளவில் தேர்வு மேற்பார்வை:**

- தங்கள் மாவட்டத்தில் நடைபெறும் அடிப்படை எழுத்தறிவுத் தேர்வினை மேற்பார்வையிட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலரின் தலைமையின் கீழ் குழுக்களை அமைத்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள

வேண்டும். இக்குழுக்களில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்ட உதவி திட்ட அலுவலர்கள், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் மற்றும் விரிவுரையாளர்கள், புள்ளியியல் அலுவலர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

**இ. மாநில அளவில் அலுவலர்கள் தேர்வு மேற்பார்வை**

- தேர்வு நடைபெறும் மாவட்டங்களை மேற்பார்வையிட பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கக இயக்குநர் அவர்கள் தலைமையில் கீழ்க்கண்ட அலுவலர்கள் தேர்வு நடைபெறும் மையங்களை மேற்பார்வையிட உள்ளார்கள்.

1. இயக்குநர்
2. இணை இயக்குநர்
3. தொழில்நுட்ப அலுவலர்
4. களப்பணி அலுவலர்
5. மாநில ஒருங்கிணைப்பாளர்கள்

குறிப்பு:

- தேர்வு நடைபெறும் நாளன்று ஒவ்வொரு மணி நேரத்திற்கு ஒரு முறை எத்தனை பேர் தேர்வில் பங்கு கொண்டனர் என்ற எண்ணிக்கையினை ஒன்றிய மேற்பார்வையாளர்களிடம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பெற்று இவ்விவரங்களை குறுஞ்செய்தி மூலம் இவ்வியக்கத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

**8. வினா – விடைத்தாள் ஒப்படைத்தல்**

- 19-03-2023 அன்று மாலை 5 மணிக்கு தேர்வு முடிந்ததும் வினா – விடைத்தாள்களை பதிவெண் வாரியாக அடுக்கி பாதுகாப்பாக கட்டி உறையில் வைத்து அந்த உறையின் மேல் மையத்தின் முகவரி உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய முகப்புத் தாளை ஒட்டி தலைமையாசிரியர் மற்றும் தன்னார்வல ஆசிரியர் கையொப்பத்துடன் **அன்றே வட்டார வள மைய அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.**
- வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் இவ்விடைத்தாள்களை மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

**9. விடைத்தாள் திருத்தும் பணி மற்றும் கணினியில் உள்ளீடு செய்தல்:**

- விடைத்தாள்களின் எண்ணிக்கைக்கேற்ப வட்டார வள மைய மேற்பார்வையாளர் / ஆசிரியர் பயிற்றுநர்கள் / ஆசிரியர்களை விடைத்தாள் திருத்தும் பணிக்கு நியமனம் செய்து ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு **30 வினா – விடைத்தாள்** என்ற வீதத்தில் **21 – 03 - 2023 ஆம் தேதி முதல் 25 – 03 - 2023 வரை 5 நாள்களில்** விடைத்தாள்கள் திருத்தி முடிக்கப்பட வேண்டும்.
- இப்பணி மந்தணத்தன்மை குறையாமல் வட்டாரக் கல்வி அலுவலர் தலைமையில் வட்டார வள மைய மேற்பார்வையாளர் கண்காணிப்பில் நடைபெற வேண்டும்.
- விடைத்தாள் திருத்தும் பணி முடிவுற்ற பின்னர் வட்டார வளமைய அளவில் மதிப்பெண் பட்டியல் தயாரிக்கப்பட்டு ஏற்கனவே கணினியில் Excel படிவத்தில் பதியப்பட்ட தேர்வர்

விவரங்களுடன் தேர்வர்க்குரிய மதிப்பெண்கள் மற்றும் தரத்தை 31-03-2023 -க்குள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

**10. தேர்வு மைய கண்காணிப்பு , விடைத்தாள் திருத்துதல் மற்றும் கணினியில் உள்ளீடு செய்வதற்கான மதிப்பூதியம்**

- 19-03-2023 அன்று நடைபெறவுள்ள தேர்வு கண்காணிப்பு பணிக்காக மையம் ஒன்றுக்கு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியருக்கு ரூ.100/-ம், மையத்தின் தன்னார்வலர் ஆசிரியருக்கு ரூ.100/-ம் மதிப்பூதியமாக வழங்கப்படவேண்டும்.
- விடைத்தாள் திருத்தும் பணிக்கு ஒரு விடைத்தாளுக்கு **ரூ.1** /-ம்(ஒரு ரூபாய் மட்டும்) மற்றும் கணினியில் பதிவேற்றம் செய்திடும் ஆசிரியர் / ஆசிரியர் பயிற்றுநருக்கு, **ரூ.1/-** ம் (ஒரு ரூபாய் மட்டும்) வழங்கப்படவேண்டும்.
- இச்செலவினத்தை Online classes expenses including ICT equipment என்ற தலைப்பின்கீழ் நிதி விடுவிக்கப்பட்டவுடன், இவ்வியக்ககத்திலிருந்து வழங்கப்படும் சுற்றறிக்கையைப் பின்பற்றி செல்வினம் மேற்கொள்ளவேண்டும்.

**11. மாவட்ட அளவில் தொகுத்தல்**

- வட்டார அளவில் தயார் செய்யப்பட்ட தொகுப்பு மதிப்பெண் பட்டியல் **04-04-2023 ஆம் தேதிக்குள்** மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
- மாவட்ட அளவில் தொகுக்கப்பட்ட மதிப்பெண் பட்டியல் விவரங்கள் **08-04-2023 -க்குள்** பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்திற்கு அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி உதவி திட்ட அலுவலர் அகியோரின் தேதியுடன் கூடிய கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரைகளுடன் அஞ்சல் மூலமாகவும் மற்றும் உண்மை நகல் மின்னஞ்சல் வாயிலாகவும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**12. கற்போருக்கு சான்றிதழ் வழங்குதல்**

கற்போருக்கு திட்ட விதிகளின்படி அடிப்படை எழுத்தறிவுச் சான்றிதழானது வழங்கப்படும்.

இயக்குநர்
பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்,
சென்னை - 06.